DINATHANTHI 09 OCT 2010

### ஈஷா அறக்கட்டளை சார்பில்

# இலவச மருத்துவ முகாம்

கோவை, அக்.9–

கோவையை அடுத்த ஆலாந்துறையில் ஈஷா அறக்கட்டளை சார்பில் ஈஷா கிராம மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையின் 3–வது ஆண்டு தொடக்கவிழாவை முன்னட்டு ஸ்ரீலாவன்யா மருத்துவமனையுடன் இணைந்து சிறப்பு மருத்துவ முகாம் நாளை(ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது. இந்த முகாமில் ரத்த வகை பரிசோதனை, ரத்த அழுத்தம், ரத்த சோகை, சர்க்கரை வியாதி ஆகியவற்றுக்கு இலவச பரிசோதனை நடத்தப்பட உள்ளது. மேலும் இதய நோயாளிகளுக்கான ஈ.சி.ஜி பரிசோதனை மற்றும் மருத்துவ ஆலோசனைகள் கிராம மக்களுக்கு இலவசமாக வழங்கப் பட உள்ளன. இந்த மருத்துவ முகாமை ஸ்ரீலாவண்யா மருத்துவ மனை டாக்டர்.கிருஷ்ணமூர்த்தி தொடங்கி வைக்க உள்ளளார். மருத்துவ முகாமை தொடர்ந்து ஈஷா மருத்துவமனை குடும்ப விழா நடக்கிறது. இதில் தொண்டாமுத்தூர் தொகுதி எம்.எல்.ஏ கந்தசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். இதை தொடர்ந்து ஈஷா ஹோம் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. இந்த தகவலை ஈஷா யோக மைய சுவாமி ஏகா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.